**கம்பஹா பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிலையான சொத்துக்கள் கணக்கு வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்து ஒன்றாக கணக்கு வைக்க வேண்டிய ஆகக் குறைந்த பெறுமதி, சொத்தின் ஆயுட்காலம் மற்றும் மீண்டும் விற்பனை செய்து பணமாக்கிக் கொள்ளும் இயலுமை போன்ற விடயங்களை கவனத்திற் கொள்ளாது நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி அமைச்சின் பெயரில் உரித்து ஆவணங்களுடன் ரூபா 04 இலட்சம் பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் டேலர், மோட்டார் வாகனம் மற்றும் வண்டிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளுக்கான சபையினால் செலுத்தப்பட்ட மின்சாரப் பட்டியலின் பெறுமதியான ரூபா 189,719 தொகையினை கடை உரிமையாளரிடம் இருந்து மீளளிப்புச் செய்வதற்காக கடன்பட்டோர் கணக்கில் ரூபா 18,344 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த 22 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய நலன்கள் ரூபா 1,133,005 தொகைக்காக கடன் கொடுத்தோர் நிதியேற்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கும், உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரமான மீதிகளுக்குமிடையே கூட்டுமொத்தமாக ரூபா 18,118,514 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெற வேண்டிய கணக்குகள்**

(அ) சபையினால் 10 கடைகளுக்காக 2016 சனவரி முதல் 2017 யூன் / யூலை காலப்பகுதியில் மின்சாரத்திற்காச் செலுத்தப்பட்ட ரூபா 103,634 தொகையான கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கடை உரிமையாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் 22 செயற்திட்டங்களுக்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 2.2 மில்லியன் தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டில் 08 செயற்திட்டங்களுக்குரியதாக கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1.1 மில்லியன் ஆகவும் காணப்பட்டன.

(இ) பெற வேண்டிய ரூபா 1,614,551 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரித் தொகை 2007 ஆம் ஆண்டு முதல் 2018 யூலை 31 ஆந் திகதி வரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 227,984,373 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் | 05 வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெறவேண்டியிருந்த ஆதனவரி மதிப்பீடு 2002 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| (i) 180 மற்றும் 181 விதிகள் | சபையின் செயலாளர், ஆயுர்வேத வைத்தியர் ஆகியோரை உள்ளடக்கிய 05 |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் பிணைப் பணம் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | 193 ஆம் விதி | ஒவ்வொரு வருமான விடயத்தின் கீழும் வருகின்ற மிகை மற்றும் பற்றாக்குறைகள், ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் வருகின்ற மிகை அல்லது சேமிப்பு தொடர்பான விடயங்களை விளக்குகின்ற கூற்றொன்று ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | வாடகை உடன்படிக்கைகளில் நிபந்தனை இலக்கம் 18 | வாடகையாளரினால் வாடகைக்குப் பெறப்பட்ட ஆதனங்களின் வாடகை செலுத்துபவர்களின் எழுத்துமூல அனுமதியின்றி வேறொருவருக்கு விற்பனை செய்தல், கையளித்தல், அடகு வைத்தல், வாடகைக்கு வழங்கல் அல்லது ஏனைய தரப்பினருக்கு கூட்டுமுயற்சியில் வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் போன்றவை தடை செய்யப்பட்டிருந்த போதிலும், அனேகமான கடைகள் வாடகையாளரினால் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 66,591,252 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,253,966 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 18,543,690 | 18,399,205 | 19,627,496 | 35,364,629 | 23,750,000 | 19,581,197 | 19,287,095 | 36,949,463 |
| வாடகை | 10,335,518 | 8,204,817 | 9,737,221 | 3,694,348 | 7,530,000 | 8,565,990 | 10,695,576 | 4,522,038 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,284,475 | 525,550 | 1,031,573 | - | 1,752,500 | 270,500 | 1,359,961 | 1,255,958 |
| ஏனைய வருமானம் | 16,685,000 | - | 8,854,423 | - | 20,454,802 | - | 8,901,281 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 40.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 39.2 மில்லியன் வரை ரூபா ஒரு மில்லியனால் குறைவடைந்திருந்தது. இதற்காக வாடகை வருமானம் ரூபா 958,355 இனால் குறைவடைந்தமை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 328,388 இனால் குறைவடைந்தமை காரணமாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

(அ) 52,471 ஆதனவரி அலகுகளிலிருந்து ஆதனவரி அறவிடுதல் 2002 ஆம் ஆண்டின் ஆதன மதிப்பீட்டின் அடிப்படையில் இடம்பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34,892 ஆதனவரி அலகுகளிலிருந்து மீளாய்வாண்டின் ஆதனவரி நிலுவை மீதியான ரூபா 35.36 மில்லியனில் 01 வருடம் முதல் 05 வருடம் வரை ரூபா 8.9 மில்லியன் தொகை, 05 வருடம் முதல் 10 வருடம் வரை ரூபா 6.9 மில்லியன் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 19.4 மில்லியன் என்பன உள்ளடங்கியிருந்தன.

### 2.2.4 கடை வாடகை

(அ) வெலிவேரிய வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கைகளின் பிரகாரம் வாராந்த சந்தை மின்சாரத்திற்காக மின்சாரப் பட்டியல் மாதாந்தம் வாடிக்கையாளரினால் செலுத்த வேண்டியிருந்தபோதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 132,182 தொகையான மின்சாரப் பட்டியல் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வாராந்த சந்தை வளவில் நாளொன்றிற்கு கணிசமான வாகனங்களின் அளவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்து வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெலிவேரிய பொதுச் சந்தையின் 05 கடைகளில் இருந்து ரூபா 462,420 தொகை, மீன் கடைகளிலிருந்து ரூபா 64,000 தொகை, கலஹிட்டியாவ உப அலுவலகத்திற்குரிய கடைகளிலிருந்து ரூபா 1,408,000 தொகை மற்றும் கம்பஹாவில் 12 கடைகளிலிருந்து ரூபா 521,802 தொகை என்பன நிலுவையாகக் காணப்பட்டன.

**2.2.5 ஏனைய வருமானம்**

--------------------------------

**(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

----------------------------------------------

(i) அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 15 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ii) செல்லுபடிக்காலம் 03 வருடங்களை விஞ்சிய 06 வியாபார நிறுவனங்களில் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாதை வருமானம்**

-----------------------------------------------------

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122 மற்றும் 126 பிரிவுகள் மற்றும் 2015 திசெம்பர் 28 ஆம் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்) அதிகாரச்சட்டம் என்பவற்றின் விளம்பர அறிவித்தல் தொடர்பான உபவிதிகளின் 01 ஆம் பட்டோலையில் அறவிட வேண்டிய கட்டணத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய பிரதேசத்தில் உள்ள சகல அறிவித்தல் பாதாதைகளிலிருந்தும் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 24 விளம்பர அறிவித்தல்கள் மற்றும் 08 பெனர்கள் என்பவற்றிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கலஹிட்டியாவ உப அலுவலகத்தில் விளம்பர அறிவித்தல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) தொலைத்தொடர்பு கோபுர வருமானம்**

----------------------------------------------------------------

(i) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் யாவற்றிலிருந்தும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் v ஆவது பட்டோலையின் பிரகாரம் v ஆம் உப பிரிவின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பஹா உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் 26 எண்ணிக்கையிலான சகல கோபுரங்களிலிருந்தும் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தொலைத்தொடர்பு கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள போட்டி மாற்றல் உபகரணங்களுக்குரிய நிறுவனங்களிலிருந்து வருமானம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 77.4 மில்லியன் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப வரி

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 17 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கு உப விதி விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 15 விடயங்களுக்காக மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 01 செயற்பாட்டை நிறைவேற்றுவதற்குத் தவறியிருந்தது. காலரீதியான செயலாற்றல் முன்னேற்றம் மற்றும் நிதி செயல்முன்னேற்றங்களை பரீட்சிக்கக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு ஒப்பாக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப்பெறாமை

வெலிவேரய பொதுச் சந்தையின் தரை மாடியில் 06 கடைகள் 2014 ஆம் ஆண்டில் இருந்தும், 03 கடைகள் 2016 ஆம் ஆண்டில் இருந்தும், பிரதேச சபைக் கட்டிடத்தில் 02 கடைகள் 2009/2010 ஆம் ஆண்டுகளில் இருந்தும், 02 கடைகள் 2012 ஆம் ஆண்டில் இருந்தும் எதிர்பார்த்த நலன்கள் இன்றிக் காணப்பட்டன.

#### (ஈ) அமுல்படுத்தப்படாத இலக்குகள்

மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 12 இலக்குகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### (உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான மூலதன செலவு ரூபா 389,838 தொகை மற்றும் வருமான செலவினம் ரூபா 26.3 மில்லியன் ஆக இருந்தன. மாதமொன்றிற்கு உருவாகின்ற கழிவுப்பொருட்களின் அளவு 320 தொன் அளவில் தம்புவவத்த தனியார் காணியில் கொண்டு போடப்பட்டு நில வாடகையாக

வருடமொன்றிற்கு ரூபா 5,987,700 தொகை காணி உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்படுகின்ற இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) ரூபா 2,000 முதல் ரூபா 4,000 வரை வாடகைக்கு வழங்கப்பட்ட பொதுச் சந்தையின் நான்கு கடைகளின் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணான ரூபா 6,000 முதல் ரூபா 15,000 வரை மாதாந்த வாடகையில் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலுவை ஆதனவரி செலுத்த வேண்டிய நபர்களுக்கு விபரங்களுடன் சிவப்பு அறிவித்தல் மூலம் முன்அறிவித்தல் வழங்கப்படாது ஆதனங்களைத் தடை செய்யும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாத 19,000 சிவப்பு அறிவித்தல் பத்திரங்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(இ) 2017 ஆம் ஆண்டில் வியாபார நிறுவனத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் பொது சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்டு மீளப் பெறுவதில் தாமதம் காணப்பட்டது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் சனவரி 01 முதல் யூலை 13 வரை குடிநீரை பெற்றுக்கொள்வதற்காக வீதிகளை வெட்டுதல், மற்றும் வீதிகளைச் செப்பனிடுவதற்காக பெறப்பட்டிருந்த வைப்புப் பணம் ரூபா 101,230 தொகை உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 02 | - | 01 |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 53 | 52 | 01 | - |
| ஆரம்ப நிலை | 118 | 105 | 13 | - |
| 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் | 09 | 09 | - | - |
| | 182 | 169 | 14 | 01 |

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் மின்சார தொழில்நுட்பவியாலளர் பதவி ஒன்று, நூலக உதவியாளர் பதவியொன்று, அலுவலக உதவியாளர் பதவிகள் 03, வேலை / களத் தொழிலாளர் பதவிகள் 04, சுகாதார தொழிலாளர் பதவி ஒன்று மற்றும் 02 சாரதிப் பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தன.

(இ) சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 141,600 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 நவம்பர் 10 ஆந் திகதி முதல் ஒரு வருடத்திற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர்க ஒருவர் பாராளுமன்ற சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்தார்.

(உ) ஊழியர் பிணை வைப்புச் செய்ய வேண்டிய 06 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை.

(ஊ) ஊழியர் கடன் கணக்கில் 05 உத்தியோகத்தர்களின் ஊழியர் கடன் மீதி ரூபா 263,368 தொகை அதிகரித்தும், மூன்று உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 10,000 தொகை குறைத்தும் பதியப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை

ரூபா 146.6 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள், ரூபா 3.9 மில்லியன் இயந்திரம் மற்றும் உபகரணங்கள், ரூபா 3.9 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமும் வண்டியும் என்பன நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை

உழவு இயந்திரம் மற்றும் இழுவைப்பெட்டி என்பன வாகன தளத்தில் துருப்பிடிக்கும் நிலையில் நீண்டகாலம் முதல் காணப்பட்ட போதும் அந்த வாகனத்தை பொருத்தமான பிரகாரம் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்தும் உரித்துறுதிகள் இன்றி 18 காணிக் கூறுகள் காணப்பட்டன.

#### 3.4.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) இம்புல்கொட நூலகத்தில் மிகவும் நல்ல நிலையில் உள்ள சென்றிக் தண்ணீர் பம்பி விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து 2014 நவம்பர் 17 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 434,175 பெறுமதியான 1 ¼ அங்குல G1 குழாய்கள் 448 அளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4.5 வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு

(அ) பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 203 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள், மோட்டார் வாகனம் மற்றும் வண்டி, இயந்திர உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 இன் நூலக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 05 நூலகங்களுக்குரிய ரூபா 64,807 பெறுமதியான 461 புத்தகங்கள் காணாமல் போயிருந்தன.

(இ) வாசகர்களுக்கு வழங்கப்பட்டு மீள கையளிக்கப்படாத ரூபா 7,449 பெறுமதியான 36 புத்தகங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கை இலக்கம் 8 இன் 4.2.1(பீ) மற்றும் (சீ) இன் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த விரிவான திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2012 மற்றும் 2012 சனவரி 05 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய சமூக அமைப்புக்களுக்கு 03 ஒப்பந்தங்களுக்கு மேல் ஒப்பந்தம் கையளிக்க முடியாதிருந்தபோதிலும் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி எம்பில்லயாய விவசாயச் சங்கத்துடன் ரூபா 14 இலட்சம் பெறுமதியான 04 ஒப்பந்த உடன்படிக்கைகள் ஒரே திகதியில் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டின் பாதீட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்ளாதிருந்தமை அல்லது தேவையற்று இருந்தமையினால் 21 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 9.09 மில்லியன் சேமிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்த்த திட்டம் சரியாக இனங்காணப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான முகாமைத்துவம் | (i) | நாளதுவரையாக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| | | (ii) | நிலுவை வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | புதிய வருமான மூலங்கள் இனங்காணப்படாமை. |
| (ஆ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் சேகரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான மக்களுக்கு அறிவுறுத்தப்படாமை. |
| | | (ii) | கழிவுப்பொருள் வரி அறவிடப்படாமை |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | உரித்துறுதி பெறப்படாமை |
| | | (ii) | சொத்துக்கள் தொடர்பாக பதிவேடு பேணப்படாமை |
| | | (iii) | கிரயம் இன்றிய நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமை |
| | | (iv) | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை |
| | | (ii) | மிகை ஒதுக்கீடுகள் காணப்பட்டமை |